DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C No.223/2020

Prosecution side witness for P.W. 11

| | | | |
|---|---|---|---|
| Name | ... டாக்டர். திரு. சுடலைமுத்து | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.08.2025.**

A1 to A3 are present.

<u>முதல்விசாரணை:-</u>

நான் கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் தூத்துக்குடி அரசுமருத்துவகல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் பேராசிரியர் மற்றும் தலைமை மருத்துவராக பணியில் இருந்து வருகிறேன். கடந்த 09.07.2019 அன்று காலை 11.20 மணியளவில் பணியில் இருந்தபோது தருவைகுளம் மெரைன் காவல்நிலைய காவல் ஆய்வாளர் நிலைய குற்ற எண். 9/2019 வழக்கில் இறந்துபோன அந்தோணி செல்லதுரை என்ற 43 வயது ஆண்நபரின் பிரேதத்தை பரிசோதனை செய்ய வேண்டி காவலர் கைலாசபதி என்பவர் மூலம் கொடுத்தனுப்பிய வேண்டுகோளை பெற்று அதே தினம் காலை 11.35 மணியளவில் பிரேதத்தை முதல் முதலாக பார்த்து பிரேத பரிசோதனையை ஆரம்பித்தேன். பிரேதத்தை பொறுப்பு காவலர் அடையாளம் காட்டினார். பிரேதம் ஆரம்பகட்ட அழுகும் தன்மை கொண்டதாக இருந்தது. பிரேதத்தில் ஆரம்ப கட்ட அழுகும் தன்மையினால் உண்டான முகம் உப்பிப்போயும், கண்கள் வெளி தள்ளியும், நாக்கு வெளிதள்ளியும், வயிறு ஊதிப்போயும், பிறப்பு உறுப்பு ஊதிப்போயும் காணப்பட்டது. பிரேதத்தில் ஆங்காங்கே தோலின் வெளிப்புற அடுக்கு உரிந்து காணப்பட்டது. உடம்பு முழுவதும் மஞ்சள் தன்மை கொண்ட காக்கி நிறத்தில் காணப்பட்டது. இறப்பிற்கு பின்னர் தோலில் ஏற்படும் வலைப்பின்னல் போன்ற மார்பிலிங் அமைப்பு உடம்பு முழுவதும் காணப்பட்டது. இறப்பிற்கு பின்னர் மூக்கிலிருந்து அழுகியதால் வெளிவரும் திரவம் காணப்பட்டது. தலைமுடி எளிதில் கையில் வரும்வண்ணம் இருந்தது. பிறப்புறுப்பு பகுதியில் உள்ள முடியும் எளிதில் கையில் வரும்வண்ணம் இருந்தது. இறந்த நபருக்கு இறப்பிற்கு முன்னர் ஏற்பட்டிருந்த காயங்கள் கீழ்வருமாறு.

காயம் எண். 1 – சிவந்த நிறத்தில் உள்ள கன்றிய காயம் 6x 5 செ.மீ பரப்பில் இடது கன்னத்தில் காணப்பட்டது.

காயம் எண். 2 – சிதைந்த காயம் 4 x 1 செ.மீ x தலைத்தோல் அளவு ஆழம் கொண்டதாக உச்சந்தலையின் நடுவே காணப்பட்டது.

காயம் எண். 3– ஒரு சிதைந்த காயம் 5 x 2 செ.மீ x தலைத்தோல் அளவு ஆழம் கொண்டதாக தலையின் இடது மேல்பக்கம் காணப்பட்டது. அது இடது காதிலிருந்து 7 செ.மீ மேல் காணப்பட்டது.

காயம் எண். 4 - ஒரு சிதைந்த காயம் 3 x 1 செ.மீ x தலைத்தோல் அளவு ஆழம் கொண்டதாக முன்னந்தலையின் நடுவே காணப்பட்டது. அது நெற்றிப்பொட்டிலிருந்து 7 செ.மீக்கு மேல் காணப்பட்டது.

காயம் எண். 5 – ஒரு சிதைந்த காயம் 4 x 2 செ.மீ x தசை அளவு ஆழம் கொண்டதாக முன்னந்தலையின் இடதுபக்கம் காணப்பட்டது. அது இடது கண் புருவத்திலிருந்து 1 செ.மீ மேல் காணப்பட்டது.

தலைத்தோல், மூளை உறைகள் மூளையை ஆய்வு செய்யும்போது தலைத்தோல் கன்றிய காயம் 25 x 16 செ.மீ பரப்பில் தலையின் இடதுபக்கவாட்டு பகுதி மற்றும் இடது மேல்பகுதியில் காணப்பட்டது. அதன் அடியில் உள்ள கபால எலும்பு 17 செ.மீ நீளத்தில் உடைந்து எலும்புகளுக்கு இடையேயுள்ள தையல் பிரிந்து காணப்பட்டது. பெருமூளையின் இடது மேல்பக்கம் மற்றும் இடது பக்கவாட்டு பகுதிகளில் உள்ளுறைக்கு வெளியேயும், வெளிஉறைக்கு உள்ளேயும் இரத்தம் வெளியேறி உறைந்து காணப்பட்டது.

பிறத்தோற்றங்கள் – மார்புக்கூடு இயல்பாக இருந்தது, வயிற்று கூட்டினுள் அழுகுவதால் உண்டான காற்று நிறைந்து காணப்பட்டது. இருதயம் அழுகுவதால் ஆரம்பகட்ட அழுகும் தன்மை கொண்டதாக இருந்தது. நாவடி எலும்பு உடைவு எதுவும் இல்லாமல் இருந்தது. இரைப்பையில் சுமார் 50 கிராம் அளவிலான செரித்தும், செரியாததுமான சமைத்த உணவுப்பொருள்கள் காணப்பட்டது. சிறுகுடலில் சுமார் 10 மில்லி பித்தம் தோய்ந்த திரவம் காணப்பட்டது. அவற்றின் உட்சவ்வு ஆரம்பகட்ட அழுகும் தன்மை கொண்டதாக இருந்தது. நுரையீரல்கள், கல்லீரல், மண்ணீரல், மற்றும் சிறுநீரகங்கள் ஆரம்பகட்ட அழுகும் தன்மை கொண்டதாகவும் இருந்தது. மூளை திசுக்கள் பசைபோன்று காணப்பட்டது. இறந்தவருடைய உடம்பிலிருந்து உள்ளுறுப்புகள் எடுக்கப்பட்டு பதப்படுத்தப்பட்டு இரசாயன பரிசோதனைக்காக திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது. பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–1** ஆகும். இறந்த நபர் பிரேத பரிசோதனைக்கு முன்பாக 3 முதல் 4 நாட்களுக்குள்ளாக இறந்திருக்கக்கூடும் என்றும், இறப்பின் நேரம் குறித்து கருத்து கூறி முதல்நிலை அறிக்கை வழங்கினேன். அந்த முதல்நிலை அறிக்கை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–2** ஆகும்.

அதன்பின்னர் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட T.No. 6703/2019 Tox.H/1617/2019 dated 19.07.2019 அறிக்கையில் உடல் உள்ளுறுப்புகளிலிருந்து நச்சுப்பொருட்கள் எதுவும் காணப்படவில்லை என்று இருந்தது, அந்த அறிக்கையை பெற்ற பின்னர் இறந்துபோன நபர் அவருக்கு தலையிலும், மூளையிலும் ஏற்பட்ட காயங்களினால் இறந்திருக்கக்கூடும் என்று கருத்துக்கூறி எனது இறுதி கருத்துரை வழங்கினேன். நான் வழங்கிய இறுதிக்கருத்துரை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–3** ஆகும். திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட T.No. 6703/2019 Tox.H/1617/2019 dated 19.07.2019 அறிக்கை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–4** ஆகும். இறந்துபோன நபரை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கம்பால் ஒருவர் தாக்கும்போது இறந்துபோன நபருக்கு மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)

இறந்துபோனவர் மது அருந்தியதற்கான அறிகுறி காணப்பட்டதா என்றால் இறப்பதற்கு முன்பாக அவர் மது அருந்தியதற்கான அறிகுறி காணப்படவில்லை. இறந்துபோனவர் மது அருந்தியிருந்தாரா என்று அவருடைய இரத்தத்தை பரிசோதனை செய்தால்தான் தெரியவரும் என்றால் இல்லை, அவருடைய உள்ளுறுப்புகளை பரிசோதனை செய்ததில் அவ்வாறு ஒன்றும் இருப்பதாக கண்டறியப்படவில்லை. ஒரு நபர் தூக்க கலக்கத்திலோ, மதுபோதையிலோ படகிலிருந்து கீழே கடலுக்குள் தவறி விழும்போது அலையின் தாக்கம் காரணமாக படகில் மோதும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்பில்லை. அவரது உச்சந்தலையில் காயங்கள் உள்ளது. ஒருநபர் கடலுக்குள் விழுந்து மேலே எழுந்திருக்கும்போது படகில் மோதி உச்சந்தலையில் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் மீண்டும் மீண்டும் படகில் மோதுவதால் மட்டுமே மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒருமுறை மோதுவதால் அனைத்து காயங்களும் ஏற்பட வாய்ப்பில்லை.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C No.223/2020

Prosecution side witness for P.W. 12

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. வீரமாமுனிவர் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.08.2025.**

A1 to A3 are present.

முதல்விசாரணை:–

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் வட்டம், பஞ்சாலங்குறிச்சி கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். 2019 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் வட்டம், கீழ அரசரடி கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். கடந்த 10.07.2019 அன்று காலை 10.00 மணியளவில் கிராம நிர்வாக அலுவலகத்தில் நானும், கீழ அரசரடி பஞ்சாயத்து செயலர் திரு.பி.பழனிமுருகன் என்பவரும் வெள்ளப்பட்டியில் புதியதாக அமைக்கப்பட்ட தார் சாலையினை பார்வையிட திட்ட இயக்குநர் அவர்கள் வருகைதர இருப்பதை எதிர்ப்பார்த்து எங்கள் அலுவலகத்தில் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது வெள்ளப்பட்டி கிராமத்தை சேர்ந்த அந்தோணி மகாராஜா த/பெ. அந்தோணி சின்னத்துரை என்பவர் தனது தாயார் ரெக்ஸ்லின்மேரி க/பெ. அந்தோணி சின்னத்துரை என்பவருடன் ஆஜராகி ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அதை அவர் சொல்ல சொல்ல பதிவு செய்தேன். அந்தோணி மகாராஜா கொடுத்த வாக்குமூலம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 5** ஆகும். இந்த வாக்குமூலத்தில் நான், என்னுடன் இருந்த ஊராட்சி செயலர் பழனிமுருகன், ஒப்புதல் வாக்குமூலம் அளித்த அந்தோணி மகராஜா த/பெ. அந்தோணி சின்னத்துரை, அவருடன் வந்திருந்த அவரது தாயார் ரெக்ஸிலின் மேரி க/பெ. அந்தோணிசின்னத்துரை ஆகியோர்கள் கையெழுத்து செய்துள்ளோம். அதன்பிறகு அந்த வாக்குமூலத்துடன் எதிரிகளையும், தாளமுத்துநகர் அழைத்து சென்று அங்கு தாளமுத்துநகர் காவல்நிலைய ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்து நடவடிக்கை எடுக்க மனு கொடுத்தேன். அந்த மனு நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது **அ.சா.ஆ–6** ஆகும். அதன்பின்னர் ஆய்வாளர் அவர்கள் வாக்குமூலத்தையும், மனுவையும் சேர்த்து, எதிரிகளை விசாரித்து, கைது செய்தார். எதிரிகளை தனித்தனியாக விசாரித்தார். அப்போது ஆய்வாளர்

அவர்களிடம் அந்தோணி மகராஜா ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தை பதிவு செய்து கொண்டார்கள். அந்த வாக்குமூலத்தில் அவர் கடல் தொழில் செய்து வருவதாகவும், கடந்த 11 வருடங்களாக தனது தந்தையுடன் கடலுக்கு சென்று வருவதாகவும், அவ்வாறு கடல் தொழிலுக்கு செல்லும்போது தனது தந்தையை சவுக்கு கம்பால் அடித்து கடலில் தள்ளி கொலை செய்துவிட்டதாகவும் கூறினார். கொலைக்கு பயன்படுத்திய சவுக்கு கம்பை வெள்ளப்பட்டி கடற்கரையில் உள்ள அவர்களுக்கு சொந்தமான போர்ட்டில் வைத்திருப்பதாகவும், அதனை எடுத்து தருவதாகவும் தெரிவித்தார். அதன்பேரில் நானும், காவல்ஆய்வாளர், பழனிமுருகன், எதிரி அந்தோணி மகாராஜா கொலை பயன்படுத்திய சவுக்கு கம்பை வெள்ளப்பட்டி கடற்கரையில் வைத்து எடுத்து ஆஜர் செய்தார். கம்பை கைப்பற்றுவதற்காக அத்தாட்சி தயார் செய்தார். அந்த அத்தாட்சியில் நானும், பழனிமுருகன் என்பவரும், காவல் ஆய்வாளரும் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது **அ.சா.ஆ–7** ஆகும். எதிரி அந்தோணி மகாராஜா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது **அ.சா.ஆ–8** ஆகும். அவருடன் வந்த அம்மா ரெக்ஸிலின்மேரி அவருக்கு சொந்தமான போர்ட்டினை அடையாளம் காட்டி ஆஜர் செய்தார். அதை வெள்ளப்பட்டி கடற்கரையில் வைத்து போர்ட்டினை கைப்பற்ற அத்தாட்சி தயார் செய்தார்கள். அந்த அத்தாட்சியில் நானும், பழனிமுருகன் என்பவரும், காவல் ஆய்வாளரும் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது **அ.சா.ஆ–9** ஆகும். எதிரி ரெக்ஸிலின் மேரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது **அ.சா.ஆ–10** ஆகும். நானும், பழனிமுருகன் என்பவரும், காவல் ஆய்வாளரும் கையெழுத்து செய்தோம். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சவுக்கு கம்புதான் எதிரி அந்தோணி மகாராஜா எடுத்து ஆஜர் செய்ததாகும் (சொத்து பட்டியல் வரிசை எண். 1ல் உள்ளது ) அது **அ.சா.பொ. 1** ஆகும். பவின் என்று எழுதப்பட்ட IND–TN–12–MO இரண்டு நம்பர் அழிக்கப்பட்டு O என்ற எழுத்துள்ளது, சிவப்பு கலர் இன்ஞ்சின் பொருத்தப்பட்ட போர்ட் ஒன்று **அ.சா.பொ.2** ஆகும். அதற்கான புகைப்படங்கள் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது **அ.சா.பொ.3** வரிசை (3 எண்ணம்) ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)

10.07.2019 அன்று புதியதாக அமைக்கப்பட்ட தார்சாலையை பற்றி பேசிக்கொண்டிருந்தோம் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எதிரிகளான அந்தோணிமகராஜாவும், அவரது அம்மாவும் எங்கள் அலுவலகத்திற்கு எதில் வந்தார்கள் என்றால் ஞாபகமில்லை. அவர்கள் இருவரும் என்னை பார்க்க வரும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 10.00 மணி இருக்கும். அவர்கள் என்னிடம் விவரத்தை சொன்னபிறகு போலீசாருக்கு தகவல் கொடுத்தேனா என்றால் நான்

எழுதிக்கொண்டேன். தகவல் சொல்லவில்லை. எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் எவ்வளவு நேரம் எழுதினேன் என்றால் 1 ½ மணி நேரம் எழுதினேன். அவர் சொல்ல சொல்லதான் நான் எழுதினேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் மொத்தம் 5 பக்கங்கள் கொண்டது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்தோணி மகாராஜா, ரெக்ஸிலின்மேரி என்று கையெழுத்து மேலே எழுதப்பட்ட பேனாவினால் எழுதப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய கையெழுத்தும், பஞ்சாயத்து செலாளர் கையெழுத்தும் மேலே எழுதப்பட்ட பேனாவினால் போடப்பட்டுள்ளது என்றால் என்னுடைய கையெழுத்து மேலே எழுதப்பட்ட பேனாவினால் எழுதப்பட்டுள்ளது. பழனிமுருகன் என்பவர் அதே பேனாவினால் கையெழுத்து செய்யவில்லை. நான் ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்றபின்னர் நான் காவல்நிலையத்திற்கு தகவல் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியபிறகு காவல்நிலையத்திற்கு உடனடியாக அழைத்து சென்றேனா என்றால் அழைத்து சென்றேன். காவல்நிலையத்தில் வைத்துதான் தனி அறிக்கை தயார் செய்தேன் என்றால் இல்லை, என்னுடைய அலுவலகத்தில் வைத்து தயார் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலம் வாங்கும்போது நானும், பஞ்சாயத்து செயலாளரும் ஒன்றாகத்தான் இருந்தோம் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கு கீழ் இடம்பெற்றுள்ள எனது சீலுக்கும், ஊராட்சி செயலர் அவருடைய சீலுக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். நான் காவல்நிலையத்திற்கு எப்படி போனேன் என்றால் எனது இருசக்கரவாகனத்தில் சென்றேன். பஞ்சாயத்து செயலாளர் அவர் எப்படி போனார் என்றால் அவரது இருசக்கரவாகனத்தில் சென்றார். நாங்கள் காவல்நிலையத்திற்கு போகும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 12.00 மணி இருக்கும். என்னுடைய அலுவலகத்திலிருந்து காவல்நிலையம் எத்தனை கி.மீ துாரம் இருக்கும் என்றால் சுமாராக 5 கி.மீக்குள்ளாக இருக்கும். நான் காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னபிறகு காவல்நிலையத்திலிருந்து என்னுடைய அலுவலகத்திற்கு ஆய்வாளர் வந்தாரா என்றால் வந்தார். காவல்நிலையத்தில் ஒப்புதல்வாக்குமூலம் வாங்கும்போது அந்தோணிமகாராஜாவுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் அந்தோணிமகாராஜா, அவரது அம்மா, நான், காவல் ஆய்வாளர் மற்றும் பழனிமுருகன் ஆகியோர்கள் இருந்தோம். இருவரையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். 2ம்எதிரி ரெக்ஸிலின் மேரியிடம் வாக்குமூலம் வாங்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் நான், காவல் ஆய்வாளர், பழனிமுருகன், ரெக்ஸிலின்மேரி ஆகியோர்கள் இருந்தோம். வேறு யாரும் உடன் இல்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் தட்டச்சு செய்தார் என்றால் எதிரி சொல்ல சொல்ல எழுத்தர் எழுதி தட்டச்சு செய்யப்பட்டது. தட்டச்சு யார் செய்தார் என்றால் காவலர் ஒருவர் தட்டச்சு செய்தார், யார் என்று குறிப்பிட்டு தெரியாது. நான் கையால் எழுதப்பட்ட எந்த ஒரு ஆவணத்திலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து கையால் எழுதப்பட்ட ஆவணத்தில் கையெழுத்து செய்தேன். தட்டச்சு எவ்வளவு நேரம்

செய்தார்கள் என்றால் தோராயமாக தெரியவில்லை. எவ்வளவு நேரம் கைப்பட எழுதினார்கள் என்றால் 5 நிமிடம் எழுதினார்கள். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ–8 ஆன ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னுடைய கையெழுத்து மட்டும் உள்ளது என்றும், அலுவலக சீல் இல்லை என்றால் சரிதான், பதவி மற்றும் கிராமம் பேனாவால் எழுதப்பட்டுள்ளது. அ.சா.ஆ–8 ஆன ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்யும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் 12.10 மணி இருக்கும். எதிரி ரெக்ஸிலின் மேரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்யும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் ஞாபகமில்லை. அ.சா.ஆ–8 ஆன ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்தோணி மகாராஜா கையெழுத்து போட்டுள்ள பேனாவும், நான் என் அலுவலகத்தில் எழுதி வாங்கிய வாக்குமூலத்தில் உள்ள பேனாவும் ஒன்றுதான் என்றால் இனம் காண முடியவில்லை. இரண்டு பேனாவும் ஒன்றுதான் என்றால் இனம்காண முடியவில்லை. எதிரி ரெக்ஸிலின் மேரியின் கையெழுத்தும், நான் என் அலுவலகத்தில் எழுதி வாங்கிய வாக்குமூலத்தில் உள்ள பேனாவும் ஒன்றுதான் என்றால் இனம் காண முடியவில்லை. அ.சா.ஆ–8 ல் அந்தோணி மகாராஜா என்று எழுதப்பட்டுள்ள கையெழுத்தும், ரெக்ஸிலின் மேரி என்று எழுதப்பட்ட கையெழுத்தும், நான் ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ–5 எழுதிய பேனாவின் மையும் ஒன்றுதான் என்றால் என்னால் தற்போது இனம் காணமுடியவில்லை. தாளமுத்துநகர் காவல்நிலையத்திலிருந்து வெள்ளப்பட்டி கடற்கரைக்கு செல்ல வேண்டுமென்றால் என்னுடைய அலுவலகத்தை தாண்டிதான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு தாளமுத்துநகர் காவல்நிலையத்திலிருந்து வெள்ளப்பட்டி கடற்கரைக்கு செல்ல கிளம்பினோம் என்றால் 3.50 மணி இருக்கும். நான் எந்த வாகனத்தில் வெள்ளப்பட்டி கடற்கரைக்கு வந்தேன் என்றால் காவல்ஆய்வாளர் வாகனத்தில் வந்தேன். காவல் ஆய்வாளருடன் வெள்ளப்பட்டி கடற்கரைக்கு வந்தோம் என்றால் தற்போது ஞாபகமில்லை. பஞ்சாயத்து செயலாளர் தாளமுத்துநகர் காவல்நிலையத்திலிருந்து, வெள்ளப்பட்டி கடற்கரைக்கு எதில் வந்தார் என்றால் அவரும் எங்களுடன்தான் வந்தார். தாளமுத்துநகர் காவல்நிலையத்திலிருந்து, வெள்ளப்பட்டி கடற்கரைக்கு செல்வதற்கு எவ்வளவு தூரம் என்றால் தோராயமாக 7 கி.மீ. ஜீப்பில் வருவதாக இருந்தால் எவ்வளவு நேரத்தில் வந்துவிடலாம் என்றால் அதிவிரைவாக வந்தால் 5 நிமிடத்தில் வரலாம். சாதாரணமாக வந்தால் 10 நிமிடம் ஆகும். அ.சா.பொ.1 ஐ கடற்கரையில் எந்த திசையில் எங்கிருந்து கைப்பற்றினார்கள் என்றால் கடற்கரையிலிருந்து மேற்குபகுதி. ஊரிலிருந்து எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 700 மீட்டர் இருக்கும். அத்தாட்சியை எழுதியது யார் என்றால் காவல் ஆய்வாளர். அ.சா.பொ.1 ஐ எடுத்த இடத்திற்கு செல்லும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் 4.15 மணி. அத்தாட்சி தயார் செய்ய எவ்வளவு நேரம் ஆகியது என்றால் 4 நிமிடம். அ.சா.பொ.1 ஐ எதிலிருந்து எடுத்துக்கொடுத்தார் என்றால் அவருடைய போர்ட்டிலிருந்து எடுத்துக்கொடுத்தார். அந்த சமயத்திலேயே அ.சா.பொ.2 ஐ கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் இந்த

வழக்கில் தனி அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ரெக்ஸிலின் மேரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் 1.45 மணி இருக்கும். என்னை போலீசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 10.07.2019 அன்று காவல் ஆய்வாளர் விசாரித்தார். நான் சொன்னமாதிரி, சொன்ன நேரத்தில் எதிரிகள் என்னிடம் என் அலுவலகத்தில் வந்து சரணடைந்து வாக்குமூலம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் காவல்துறையினர் காவல்நிலையத்தில் வைத்து எதிரிகளிடம் வாக்குமூலம் வாங்கியதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. அ.சா.பொ.1, 2 ஐ சொன்ன நாள் நேரத்தில் என் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், அதற்கு அத்தாட்சி தயார் செய்ததாகவும் சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் விசாரணைக்காக வீட்டிலிருந்தவர்களை அழைத்து வந்து காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் நான் கையெழுத்திட்டுள்ளேன் என்றுசொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலங்கள் எல்லாமே காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்காக பின்னிட்டு உருவாக்கப்பட்டுள்ளது என்றுசொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C No.223/2020

Prosecution side witness for P.W. 13

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. முருகானந்தம் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.08.2025.**

A1 to A3 are present.

முதல்விசாரணை:–

நான் குடும்ப நல நீதிமன்றம், தூத்துக்குடியில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து 31.01.2024 ஆம் தேதி பணி ஓய்வு பெற்று தற்போது விளாத்திகுளத்தில் குடியிருந்து வருகிறேன். 2019 ஆம் வருடம் தூத்துக்குடி நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிந்தபோது தாளமுத்துநகர் காவல்நிலைய குற்ற எண். 165/2019 பிரிவு 120 பி, 302 இதச வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலம் 20.08.2019 ஆம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள். சுமார் 121 செ.மீ நீளம், 12 செ.மீ சுற்றளவு கொண்ட சவுக்கு கம்பு ஒன்று, பவீன் என்று எழுதப்பட்ட இன்ஞ்ஜின் நம்பர் கிரிலோஸ்கர் மாடல் 3450 SR No.ABC1182355HPDIN 6270 RPM 3000, போர்ட் நம்பர் IND TN 12MO, இரண்டு நம்பர் அழிக்கப்பட்டு O என்று எழுத்து உள்ளது சிவப்பு கலர் இன்ஞ்ஜின் பொருத்தப்பட்ட போர்ட் ஒன்று, அந்த போர்ட்டை வெள்ளப்பட்டி கடற்கரையில் வைத்து நீதித்துறை நடுவர் அவர்கள் உத்தரவின்பேரில் கைப்பற்றப்பட்டு பி.ஆர்.எண்.105/2019 என்று என எண் கொடுக்கப்பட்டது.

மேற்படி வழக்கில் கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களை திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப நீதிமன்ற கடிதம் என்னால் கொடுத்தனுப்பட்டது. அந்த நீதிமன்ற கடிதம் என்னிடம் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–11** ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)

ஆய்வாளர் என்னை எந்த தேதியில் விசாரித்தார் என்றால் ஞாபகமில்லை. என்னை ஆய்வாளர் விசாரிக்கும்போது முதல்விசாரணையில் சொல்லியுள்ள அனைத்து விவரங்களையும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் நினைவில்லை. கைப்பற்றப்பட்ட சொத்துக்களை என்னிடம் யார் ஒப்படைத்தார்

என்றால் காவலர் ஒப்படைத்தார், யார் என்று ஞாபகமில்லை. ஆனால் காலை 10.30 மணிக்கு திறந்த நீதிமன்றத்தில் படிவம் 91 மூலம் தாக்கல் செய்யப்பட்டது. சவுக்கு கம்பை எங்கு வைத்து பார்வையிட்டு பி.ஆர் எண் கொடுத்தேன் என்றால் நீதிமன்றத்தில் வைத்து கொடுத்தேன். போர்ட்டை வெள்ளப்பட்டி கடற்கரையில் வைத்து பார்வையிட்டேன் என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து வெள்ளப்பட்டி கடற்கரைக்கு சென்றேன் என்றால் மாலை 4.00 மணிக்கு சென்றேன். நான் நீதிமன்றத்திலிருந்து 4.00 மணிக்கு கிளம்பினால் போர்ட்டை பார்த்துவிட்டு திரும்ப வந்து 4.15 மணிக்கு பிஆர் எண் கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, நான் கடற்கரைக்கு சென்று போர்ட்டை பார்த்துவிட்டு திரும்ப வந்து 2 பொருட்களுக்கும் ஒரே பிஆர்எண் கொடுத்தேன். படிவம் 91ல் 16.15 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது 19.07.2019 அன்று மேற்படி நேரம் குறிக்கப்பட்டுள்ளது, நான் 20.08.2019 அன்று பிஆர்எண் கொடுத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ–11 என்னால் தயார் செய்யப்பட்டு தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டதா என்றால் 21.08.2019 அன்று நான் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கு மாறுதலாகி சென்றுவிட்டேன். மேற்படி கடிதம்16.10.2020 அன்று நீதிமன்றத்திலிருந்து டெஸ்பட்ஜ் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் குறித்து சாட்சியமளித்தது பொய் என்றால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்தேன்.

**மறுவிசாரணை இல்லை.**